Individual copy

14 NOV 2022

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கரூர் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சு.கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மகன் திரு.கி.விவேக், என்பவர் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ–6) துறை

01 DEC 2022

அரசாணை (டி) எண்.49

நாள்: 07.11.2022
சுபகிருது, ஐப்பசி 21,
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. கரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணை ந.க.எண்.பவ4/752/2021, நாள்:28.02.2022.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.31372/2022/டி2, நாள்:22.06.2022.

*****

ஆணை:

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதத்தில், கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், கரூர் மாவட்ட ஆட்சியரக வளர்ச்சிப் பிரிவில் வட்டார வளர்ச்சி அலுவலர்(தேர்தல்) ஆக பணிபுரிந்து 14.09.2020 அன்று பணியிடைக்காலமான திரு.சு.கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மகன் திரு.கி.விவேக் என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறையின்படி கருணை அடிப்படையில், கரூர் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 07.03.2022 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

..2

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது கடிதத்தில், பணியிடைக் காலமான திரு.சு.கிருஷ்ணமூர்த்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் தனது தகுதிகாண் பருவத்தினை 30.01.1998 பிற்பகல் நிறைவு செய்துள்ளார் என்றும் அவரது வாரிசுதாரரான மகன் திரு.கி.விவேக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கக் கோரி 16.02.2021 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், தனியர் திரு.கி.விவேக் 12.06.1995 அன்று பிறந்துள்ளார் என்றும், மேலும் தனது இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (10-ம் வகுப்பு) ஏப்ரல் 2012 அன்று தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் தனியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்று ஒருங்கிணைந்த சான்றிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 25 என்றும் தனியருக்கு பணிநியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அவரது குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், தனியர் 07.03.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு.கி.விவேக் என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 07.03.2022 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அலுவல் சாராகுறிப்பு எண் 16865/ட்டி1/2022-1, நாள்:14.10.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண் 3352863/ஜி1/2022-1, நாள்:20.10.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.

மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் மாவட்டம்.

மாநிலக் கணக்காயர், சென்னை -18.

கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15

மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், கரூர் மாவட்டம்.

**நகல்:**

திரு.கி.விவேக், இளநிலை உதவியாளர்,

ஊரக வளர்ச்சிப் பிரிவு, கரூர் மாவட்டம்.

(வழி:மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் மாவட்டம்.)

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.

மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சே. சாந்தி 08/11/2022

பிரிவு அலுவலர்

மே.கு.ந.க.பவ4/752/2022,
நாள். .12.2022.

மாவட்ட ஆட்சியரக(வளர்ச்சி)பிரிவு,
கரூர்.

"அரசாணை (4ப) எண்.49,ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.அ6) துறை,நாள்.07.11.2022 நகல் சார்வு செய்யப்படுகிறது"

மாவட்ட ஆட்சியருக்காக,
கரூர்.

பெறுநர்
செல்வன்.கி.விவேக்,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,அரவக்குறிச்சி–(உரிய வழியாக).

நகல்:– வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) ,ஊராட்சி ஒன்றியம்,அரவக்குறிச்சி.
(சார்வு செய்து சார்வு நகல் அனுப்புதல்)
நகல்:– பவ4–முக்கிய ஆணைத் தொகுப்பு.

மே.கு.ந.க. எண்: அ1/547/2022
நாள்: 12.12.2022

ஊராட்சி ஒன்றியம்
அரவக்குறிச்சி

"நகல் சார்வு செய்யப்படுகிறது"

Block Development Officer(B.P)
Panchayat Union, Aravakuruchi

12/12/22

பெறுநர்
செல்வன்.கி.விவேக்
இளநிலை உதவியாளர்
ஊராட்சி ஒன்றியம்
அரவக்குறிச்சி